
காதல் ஒரு சூதாட்டம்
Pax Ravichandra
+94763223960
pax.ravichandra@gmail.com
14.10-2024

காதல் ஒரு சூதாட்டம்	
எண்	பொருளடக்கம்
1	காதல் ஒரு சூதாட்டம்
2	நிலவு இல்லாத வானம்
3	ஒரு துளிக் கண்ணீர்
4	விழி மொழிந்த காதல்

காதல் ஒரு சூதாட்டம்



கவர்ச்சியும், காதலும் புரியாத இளமைப் பருவம்,
காதலுக்கு மனமுதிர்ச்சி வேண்டும், இளமையில்
புரியாத தத்துவும், கவர்ச்சி மெய்யின் ஒலி
காதல் இதயத்தின் மொழி, புரிந்தால் வாழ்வில் ஒளி



வண்டுபடு மதுமலர்க் கூந்தல் நடையோடு சதிராட,
மையளாவிய விழிகள் நெஞ்சைத் துளாவி காதல் மொழி பேச,
கண்படும் அழகைக் கண்ட நெஞ்சில் காதலின் கொண்டாட்டம்
காமன் கணைபட்ட கட்டழகன் நெஞ்சில் காதலின் பூபாளம்

காளை நெஞ்சில் காதலின் கீர்த்தனம்
கோதை நினைவிலே ஆண்டாளின் பாசுரம்
இருமனம் ஒருமனமான வாழ்வில் திருமணம்
வாழ்விலே காதலின் ஓயாத நறுமணம்

மணவாழ்வில் காதலின் சுகந்தம்
நாளும் மஞ்சத்தில் காதற் காமத்தின் இன்பம்
காலவெள்ளத்தில் குழந்தைக்கு தாயான பந்தம்-
அழகனோ சோம்பேறியும் சூதாடியுமான துர்க்கந்தம்

வறுமை கதவைத் தட்டிட காணமற்போன வசந்தம்,
வேலைக்குப் போங்கள், வார்த்தைகள் முற்றித் தடித்திட
வனிதையை அடித்து உதைத்து திட்டிய பந்தம்
அறம், பொருளின்றி இன்பமிழந்த இல்லறம் எரிநரகம்



சூதாடிக்கு காதலும் காமம் தீர்க்கும் சூதாட்டம்,
உழைத்து மனைவி, குழந்தையை பராமரித்து
நேசிக்காத ஊதாரி, அடி உதையிலும் காதல்
மழை பொழிந்த அழகு மங்கையும் ஊதாரி



அடிபட்டு, உதைபட்டு, மிதிபட்டு முகம் சிதைந்தும்
கணவனைக் காட்டிக் கொடுக்காத காதல் இனிது
கைகொடுத்த தெய்வமாய் வைத்தியம் செய்வித்து,
நட்பைக் காத்த ஸ்நேகமோ அரிதிலும் அரிது

ஆசை மறைந்து, மோகம் கழிய, மனைவி,
மகவை விட்டுப் பிரிந்த உறவு, தன்னந் தனியே
வாழ வந்த அன்னைக்கு, வாழ்வு போர்க்களமா?
சூதாட்டமா? புரியாத மனதிலே அங்கலாய்ப்பு

நிலவென்றான், வாச மலரென்றான்,
நித்திலம் என்றான்,அறுசுவை கடந்த அருஞ் சுவை
காதற் காமம் என்றான்-இறுதியில் மங்கையையும்,
மகவையும் கைநெகிழ்ந்து சூதாடி கண் மறைந்தான்



காதல் சொல்லி காமம் தணித்த கயவன், மங்கை
உடலையும், உள்ளத்தையும் ஊனமாக்கிய அரக்கன் ,
தாய், குழந்தையை தாபரிக்க மறந்து நாளும் சூதாடி
இல்லறத்தை எரிநரகாய் மாற்றிய கயவன்



அன்பு சிநேகிதிக்கு அரிய உறவான நட்பு
அடி உதை படும் நேரமெல்லாம், தோளோடு
தோள் நின்று உதவிய பொற்பு, வேலை தேடி
சிநேகிதிக்காய் அலைந்த அன்புறவு

கடன்பட்டுச் சூதாடித் தோற்று-கைகலப்பில்
ஈடுபட்டு சிறைப்பட்ட சூதாடி அனுப்பிய சேதி
உன் கணவன் திருந்திவிட்டான், என்னை மீட்டெடு
கப்பமாய் கேட்ட தொகையோ பல்லாயிரம்

அன்பினால் ஈர்ப்புண்டு, ஆசைக் கணவன் திருந்திவிட்டான்
மகிழ்ந்த பெண்மை பணத்திற்காய் பலரிடம் அலைந்து
இயலாமையின் இறுதியில் மெய்விற்றுப் பொய்யனைக் காக்க
துச்சாதனருக்கு சேலை அவிழ்த்த மனதில் கொடிய வேதனை

மீண்ட சொர்க்மென கணவனை வீட்டுக்கழைத்த அம்மை,
விருந்தோடு தன்னையும் அளித்து தேன்நிலவு கொண்டாடிய
பெண்மை, விடியலில் இருந்த பணத்தையும் களவாடி,
வேசி, விபச்சாரி நீ ஏசி மறைந்த சூதாடி





காதல் கனவாக, வாழ்வு பெருஞ்சுமையாக,
பொருளிழந்த அழகு- பொருள் ஈட்ட
காமவண்டுகள் தேன் சுவைக்க
மஞ்சத்தில் இதழ் விரித்த தேன் நிலவு

பொன்னில்லை, பொருள் இல்லை, வீட்டு வாடகை
செலுத்தப் பணமில்லை, வயிற்றில் பசியோ
நிலைத்த தொல்லை, மெய்யோ மூலதனமாக
பஞ்சணை வியாபாரம் நெஞ்சிற்கு நஞ்சான துயரம்

வேலை இல்லை, பணம் இல்லை, வேண்டாத
சொந்தமென உறவுகள் ஒதுக்கிட, காயமான மனம்,
கட்டழகு குலையாத தினம், பாலியல் உறவு தேடும்
செல்வருக்கு விருந்தாக தன்னை இழந்த பரிதாபம்



கிழட்டுச் செல்வரின் அருவருப்பான பாலியல் சல்லாபம்,
ஒரு பொழுது ஈட்டும் செல்வம் ஒரு வார வாழ்க்கைச்
செலவு, அழைபேசியில் அழைப்பு, விலைமகளாய் வாழ்வு,
கொஞ்சி மகிழும் மஞ்சத்தில் நாளும் சாவு

இந்த அருவெறுப்பான வாழ்வை விட்டு விடு
புதுவாழ்வு தொடங்கு வற்புறுத்தி அழுத நட்பு
வேலையில்லை, குழந்தை வேறு, துணையில்லை
வேறு வழியில்லை தோள் சாய்ந்து அழுத உறவு



செல்வருக்கோ சமூகத்தில் உயர் அந்தஸ்து
பாலியல் சல்லாபத்தை மறைக்க பலத்த பந்தோபஸ்து,
அறியாமல் வரும் அழைப்பு, அருவெறுத்த உடல் உறவில்
அசிங்கப்பட்டு புண்பட மனதிலே வளரும் கசப்பு

குழந்தையைத் தனியே விட்டுச் சென்ற வேளை
குழந்தைகள் காப்பகத்திற்கு அண்டை வீட்டார்
செய்த முறைப்பாடு, குழந்தையோ காப்பகத்தில்
அன்னை வாழ்வோ நாளும் போர்க்களத்தில்

அழுதாள் புலம்பினாள் என் குழந்தையைத் தாருங்கள்
கெஞ்சினாள்,கண்ணீரோடு மன்றாடினாள்
சட்டம் இரங்கவில்லை,சமூகம் உதவவில்லை
கணவனோ கண் மறைந்த நிலை

பாலியல் தொழிலால் மனங்கசந்த மங்கை
பாலனை இழந்து தவித்த அம்மை, மன உளைச்சலின்
உச்சத்தில், மாடியில் இருந்து குதித்து தற்கொலை
புரிந்தாள் நண்பி, வாழ்வை மாற்றிப்போட வந்த சேதி





அடிபட்டு, மலர் முகம் சிதைபட்டு
படுக்கையில் கிடந்த நிலையில், ஓடோடி வந்து,
சிதைபட்ட முகத்தை செல்பி எடுத்து
அழுகு காட்டி சிரித்து உதவிய அன்புறவு

இன்றோ அந்தி வருமுன் வாடிய பூவாய்
அமைதியில் உறங்கிட, அழகு காட்டி எழுந்திரு, பேசிடு
என்னைத் திட்டடி, கொஞ்சடி என் சிநேகிதி
பொங்கும் கண்ணீரோடு சொல்லியழுத நட்புறவு

தற்கொலை என பொலிஸாரின் முடிபு
எனக்காகப் போராடியவளைத் தள்ளிக் கொன்றார்
அறிந்த நட்பு, நீதிக்காய் போராடிய மங்கை
காமுகனை கொன்று பழி தீர்த்த வேங்கை

ஏன் பிறந்தோம் என்ற ஏக்கம்
வாழ்வோ துக்கம் என்ற மயக்கம்
இருந்த ஒரே நட்பும் கண் மறைந்திட
மனதில் ஏனிந்த வாழ்வு என்ற தர்க்கம்



சோகப் பூகம்பம் வெடித்த இதயமெங்கும்
ஆறாத ரணம், புலரும் பொழுதெல்லாம்
வாழ்வோ போராட்டம், அமைதி எட்டாத நிலவு
அன்பு, காதல், நட்பு கலைந்த வண்ணக் கனவு

உள்ளம் குமுற, உருகும் விழிகளில்
கங்கை பொங்க, உடைந்த நெஞ்சத்தில்
காங்கை தகிக்க, வானை வெறித்த பார்வை
வாழ்வே மாயம் என்ற பெண்மை

நள்ளிரவில் குழந்தைகள் காப்பகத்தில் திருடிபோல்
நுழைந்த பெண்மை, தன் குழந்தையைத் திருடி
ஓடிய அம்மை, சோகத்தின் உச்சத்தில் குழந்தையோடு
கடலில் மூழ்கி வாழ்வைச் சபித்த மங்கை



இருண்டுபோன வசந்தம், அந்தி வருமுன்
உதிர்ந்து விழுந்த மலரோ சுகந்தம்
காயமான மனதில் அமைதியில்லை-அன்பு செய்ய
உலகில் அவளுக்கென்று ஓர் உறவுமில்லை



காமக் கவர்ச்சியையும் காதல் என்றெண்ணி ஏமாந்த கன்னி,
காமம் கழித்து கண்மறைவான கணவனோ துரோகி,
நாளும் தனித்துப் போராடிக் களைத்த மனது,
தற்கொலையில் அமைதியைத் தேடிய அழகோ கொடிது

வாழும் உலகில் வருந்தித் தேடியும் கிட்டாதது நிம்மதி
மனம் அழிந்தால் கிட்டும் அமைதி, பாலியல் வாழ்வோ
செல்லாக் காசு, மரணம் தரும் நிம்மதியோ பொற்காசு
அலைதாண்டி ஆழ்கடலில் மதுமலர் தேடிய நிம்மதி

கன்னியாய் காதற் காமம் சுவைத்த பெண்மை
கருவுற்று தாயாய் மலர்ந்த அம்மை, அரிய நட்பைச்
சுவைத்த மேன்மை-வாழ்வே மாயம் என்றாக
குழந்தையோடு தன்னை மாய்த்த மென்மை

சூதாடிக் கணவன் காதல் சூதாட்டத்தில்
வென்ற உடலை, காமச் சூதாடிகளுக்கு ஏலமிட்ட
நங்கை,உடல் விற்று உடல் வளர்க்கும் வாழ்வால்
மனமுடைந்து உயிரை மாய்த்த அம்மை

ஆழ்கடலில் விளையும் அரிய முத்தல்ல நிம்மதி
தன்னை அறிந்தால் மனம் அழியத் தோன்றும் அமைதி
தூய மனத்தவருக்கு நிம்மதி, அதுவே இறை சன்னதி

சோகச் சுனாமிப் பேரலைகளோடு வாழ்வில் போராடிக்
களைத்த மங்கை, அமைதியை ஆழ்கடலில் தேடிய
நங்கை, கடலலைகள் கரைசேர்த்த உடலத்தில்
குழந்தையை கட்டியணைத்தவாறு இறந்து கிடந்த அம்மை



ஊடும், பாவுமாய் இரு உள்ளங்கள்
ஒன்றாய் கலந்து நெய்யும் இல்லற உறவு
புரிந்துணர்வின்றிக் கலைந்த வண்ணக் கனவு
கயவருக்கு காதலும் சூதாட்டமான பொழுதுபோக்கு



ஆணுக்குத் துணையாய் பெண்ணையும்,
பெண்ணுக்குத் துணையாய் ஆணையும் படைத்து
குடும்பமாய் வாழ ஆசீர் வழங்கிய இறைவன்,
இணைபிரியாத உறவிலே இன்பத்தை வைத்து,
அறம், பொருள் இன்பம் அறிந்து கடந்தால்
நம்முள் மோட்சம் என்ற தலைவன்

கடல் நீரோடு கலந்த கண்ணீர், கடலோடு கலந்தும்
கலவாது கரை ஒதுங்கிய உடலம், கண்ட
விழிகளிலும் கண்ணீர், செந்நீர், கண்ணீர் சிந்திய
வாழ்வில், அபலை காணாத பன்னீர்



மனிதன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக்
கொண்டாலும், தன்னை இழந்தால்
என்ன பயன் -மனுமகன் கேள்வி
அன்பு,கருணை உலகம் புரியாத வேள்வி

தாயோ தெய்வம் மாறாத உண்மை-பெண்மையின்
மேன்மை புரியாது காமப் பொருளாய்க் காணும்
ஆண்மையின் சிறுமை, குறை நீங்கினால்
அன்றே உலகில் மேன்மை

கன்னியாய் காதலில் விழுந்து, அன்னையாய் குழந்தை ஈன்று
அடி, உதைபட்டும் கணவனைக் காட்டிக்கொடுக்காத பெண்மை
நடபைக் கற்போடு காத்த மேன்மை, சூதாடிக்காய் விலைமகளாய்
மாறிய கொடுமை, எதிர் நீச்சல் போடத் திராணியற்று
குழந்தையோடு தன்னையும் மாய்த்த அம்மை

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே

Pax Ravichandra-15-10-2024

நிலவு இல்லாத வானம்





என் கண்களில் ஏழ் கடலின் ஈரம்
பூ நெஞ்சிலே இமயப்பாரம்
கண்டு காதலான உறவு-இன்று தேவதாஸாய்
நான் புலம்பிட கண்மறைந்த தேன்நிலவு

வரும் வழிபார்த்துப் பூத்திருக்கும் விழிகள்
வஞ்சியின் முகம் பார்த்து மலர்ந்திடும்
கவிபாடிக் களித்திருக்கும் நெஞ்சம்
வானம் பாடியாய்ச் சிறகடித்துப் பறந்திடும்

இமைக்க மறந்து விழிகள் காதல் புலத்தில் நிலைக்க,
பேச மறந்த மொழிகளை விழிகள் பேசி ரசிக்க,
பொனமேனியிலோ நாணம், பூ மகள் வீசும் நறுமணம்
காதலர் மனங்களிலோ திருநாளாய்க் காதலர் தினம்

நித்தம் பூமழை பொழிய, காதலான இதயம்
நாளும் ஒரு சந்தக் கவிதை சொல்லப் புது உதயம்
என்னைக் கவிஞனாக்கிய கன்னி-காதலால்
என் நெஞ்சைக் கொள்ளை கொண்ட அழகி



பூவால் செதுக்கிய வண்ணப் பாவை
பூத்தாடும் அழகில் மனம் கூத்தாட
காதல், காதல் என்றே மனம் பாட
என்னை காதல் மலராய் சூடிய பூவை



விழிகளோ வில்லோ, கயலோ என்னும் பாவம்
மொழிகளோ மோகனமோ, பூபாளமோ என்னும் ராகம்
அழகின் திருச்சபையாய் மங்கை- சூடிக் கொடுத்த
ஆண்டாளாய் எனக்கு மாலை சூடும் நங்கை

நடையழகு நாட்டியமாக, இடையழகு கொடியாக,
மதுமலர்க் கூந்தலில் பூவனம், செங்கனிவாயில்
தேன் மணம், திருமணத்திற்காய் நாள் குறிக்க
இருவர் உள்ளங்களிலும் காதலின் நறுமணம்

காத்திருந்த நாள் வரக் கண் மறைந்த கன்னி
பூத்தம் புதுமலர்களால் கட்டிய மணமாலை வாட
பூவான நெஞ்சம் நெருஞ்சி முட்காடாய் மாற
கண் மறைந்த தேன் நிலவு-காயமான உறவு

ஏன் பிரிந்தாய் என்னை? ஏன் மறந்தாய் என்னை
தேவதாஸாய் மனம் புலம்ப, என்னை மறந்த
பார்வதி, காணாமல்போன காதலின் பெருநிதி
நிலவில்லா வானாய் என்னை மாற்றிய காதலி



சொல்லாமல் கண் மறைந்தாள்-பல முறை
அழைத்தும் பதில் ஏதும் இல்லாத அலைபேசி
கண் இழந்த கபோதியாய் என் நிலை
நெஞ்சிலே ஓயாத சோகச் சுனாமியின் பேரலை



வான் ஒளிரும் நிலவைக் காணும்போதெல்லாம்
வாட்டும் அவள் காதல் நினைவு
வண்ணப் பூக்களைப் பார்க்கும் போதெல்லாம்,
முள்ளும் மலரும் ஒன்றான உறவு

புன்னகையால் என் நெஞ்சில் காதல் கோலமிட்ட மங்கை
பூவிதழ்களால் தேன் பருகத் தந்த நங்கை, காதலன் என்னை
கவிஞனாய் மாற்றி கடைசியில் என்னைக் கைவிட்ட பாவை
தோகை இழந்த மயிலாய் நான் வாட கண் மறைந்த பூவை

காலங்கள் போயின கானக் குயிலைக் காணவில்லை
ஒற்றைக் குயிலாய் கரையும் என்தன் மனசு
பருவங்கள் மாறின, வந்து போகும் வான் நிலவு
கண் மறைந்த எந்தன் காதல் தேன் நிலவு



நிலவில்லாத வானாய் என் மனசு
நித்தம் ஒலித்த அவள் சிரிப்போ காதல் முரசு
பண் இழந்த பாடலாய் என் வாழ்வு
பார்வதியை இழந்த தேவதாஸாய் என் சாவு

எங்கிருந்தாலும் வாழ்க, உன் இதயமும்
அமைதியில் வாழ்க, நான் பாடும் பாடலானது
இனிது, இனிது இரு உள்ளங் கலந்த காதல் இனிது
கொடிது, கொடிது காதலில் பிரிவு கொடிது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
(லோக சமஸ்தா சுகினா பவந்து)
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-11-10-2024

ஒரு துளிக் கண்ணீர்



சோகப் புயல் வீசும் நெஞ்சுக்குள்
சுனாமிப் பேரலைகளின் ஆர்ப்பரிப்பு
பூகம்பம் வெடித்த இதயத்தில்
ஏகாந்தத்தின் ஆக்கிரமிப்பு

காதல் சொன்ன கன்னி மனம் என்னை மறந்து
கடல் கடந்து பறந்து போனது, நெஞ்சம் சாதல்
சாதல் என்று பாட கானல் நீரானது காதல்,
புழுதியில் விழுந்த பூமாலை, வாடிப்போன மணமாலை



ஒற்றைக் குயிலாய் கரையும் உள்ளமெங்கும்
ஏழ்கடலின் சோக வெள்ளம்,
காதலும் கலைந்த வண்ணக் கனவு
வாழ்வே மாயம் என்ற நிகழ்வு

காதல் மலரும் முள்ளானது, அமுதான
மங்கை நெஞ்சும் ஏனோ ஆலகாலமானது
அவளுக்கென்று ஓர் மனம்-எங்கிருந்தாலும்
வாழ்க எனப் பாடும் என்தன் காதல் உள்ளம்

காதல் வரமானால் அதுவே குபேரநிதி
காதல் சாபமானால் வாழ்வோ கண்ணீர் நதி, குருதி
சிந்தும் குருஷேத்திர யுத்தமும் பதினெட்டு நாட்கள்,
நெஞ்சிலே காலமெல்லாம் ஆறாத காதலின் வடுக்கள்

வான் நிலவைக் காணும்போதெல்லாம்
தேய் பிறையாய் வாடும் உள்ளம்
வண்ணப் பூக்களைக் காணும்போதெல்லாம்
வண்ணமிழந்த ஓவியமாய் என்தன் நெஞ்சம்

பூக்களைக் கொடுத்தவனுக்கு முட்களைத் தந்தாள்
பாக்களால் வாழ்த்தியவனுக்கு கண்ணீரைப் பரிசாக்கினாள்,
பார்வதியை நேசித்தவன் வாழ்வு தேவதாஸானது,
பூ நெஞ்சம் இரும்பாய்க் கனக்க ஈர விழிகளில்
ஒரு துளிக் கண்ணீர் என்றும் நிலையானது


இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-11-10-2024

விழி மொழிந்த காதல்



பார்த்த விழிகளில் நவரசம்
உதிர்த்த மொழிகளில் கனிரசம்-அழகோ
பார்க்கத் திகட்டாத தேறல்
காளை நெஞ்சத்தில் காதலின் சாரல்

தென்றலோடு தவழ்ந்த தேவியின் நறுமணம்
என்னைத் தழுவுகையில் சுவாசத்தை நிறைத்து
காதல் சொன்ன பூ மணம், வாழ்ந்தால் இவளோடு
வாழ்வே பரிமளம், உள்ளத்திலே காதலின் பூபாளம்



கன்னியழகோ மோகனம், கவிபாட நெஞ்சிலே
காதலின் ஆலாபனம், கடைவிழிப் பார்வையில்
காதலின் நர்த்தனம், வாழ்ந்தால் உன்னோடுதான்
என் வாழ்வே காதலே உனக்கே அர்ப்பணம்

கனவும், நனவும் அவளாக
காதல் மனம் பாடும் கீதம், வாழ்வின்
தேசிய கீதமானது, அவள்
பெயரோ உச்சரிக்க மந்திரமானது

விழி மொழிந்த காதலுக்கு-குறுநகையால்
வழி மொழிந்த காதலி-இறக்கை விரித்து
மனம் பறக்க -வாழ்வைச் சொர்க்கமாக்கிய
கன்னியோ காதல் தேவதை

ஒரு பொழுது பூத்து மறுபொழுது வாட
என் வாழ்வோ எரிநரகான சோதனை
காதலும் கடந்து செல்லும் வேதனை
காதலுக்கு மனம் செலுத்தும் ஆராதனை

தேன் நிலவு காணுமுன் தேயாமல் மறைந்த
என்தன் காதல் நிலவு- பூ மழை
பொழிந்த இதயத்தில் தீ மழை பொழிய
வாழ்வோ இன்றும் அமாவாசையான இரவு

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-11-10-2024